**கொரோனா வைரஸ் (COVID-19) மூலோபாயக் கட்டமைப்புப் புதுப்பிப்பு - ஜூன் 2021**
**(வெளியீட்டில் இந்தத் தகவல் சரியாக உள்ளது. மேலும் தகவல் அறிய பின்வரும் இணைப்பைக் கிளிக் செய்யவும்:** Coronavirus in Scotland - gov.scot (www.gov.scot))

முந்தைய மூலோபாயக் கட்டமைப்பின் புதுப்பிப்பு பிப்ரவரி 2021 இல் வெளியிடப்பட்டதிலிருந்து, COVID-19 தொற்றால் நமது எதிர்காலப் பாதையைப் பாதிக்கக்கூடிய இரண்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நடந்துள்ளன. ஒன்று தடுப்பூசிகளுடன் தொடர்புடையது மற்றது புதிய உருமாறிய COVID-19 - டெல்டா மாற்றுரு. தடுப்பூசி போட்டுக்கொள்வது முன்பு நிகழாதது, என்றாலும் தடுப்பூசிகள் தொடர்ந்து COVID-19 தொற்று மற்றும் இறப்புகள் மேலும் வைரஸ் பரவல் ஆகியவற்றைக் குறைக்கின்றன. குறிப்பாகத் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களிடையே, டெல்டா மாற்றுருத் தொற்று அதிகமாக உள்ளது. எனவே, டெல்டா மாற்றுரு, வைரஸுக்கும் தடுப்பூசிக்கும் இடையிலான பந்தயத்தைத் துரிதப்படுத்துகிறது.

**அடுத்தக் கட்ட நடவடிக்கைகள்**
டெல்டா மாற்றுரு தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் இருந்தபோதிலும், தொற்றுகள், கடுமையான நோய், மருத்துவமனையில் சேருதல் மற்றும் இறப்புகள் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு பலவீனமடைந்து வருவதாகவும், COVID-19 ஆல் மக்கள் மருத்துவமனையில் செலவழிக்கும் நேரம் குறைந்து வருவதாகவும் தெரிகிறது. இதன் பொருள், வைரஸை அடக்குவதற்கான அணுகுமுறை மூலம் நாம் அதை மிகவும் குறைத்து அது அதிகரிக்காமல் வைத்திருக்க முடியும். அதன் மூலம், திருத்தப்பட்ட மூலோபாய நோக்கத்துக்கான எங்கள் முயற்சிகளில் கவனம் செலுத்தலாம்: வைரஸை அடக்கி அதன் பாதிப்புகளைத் தணிக்கும் அதே வேளையில் சிறந்த எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்பலாம்.

புதிய மாற்றுருக்களுக்கு எதிராகத் தடுப்பூசி தொடர்ந்து பயனளிக்கும் பட்சத்தில், தடுப்பூசி கண்டுபிடிப்பின் வாயிலாக, COVID-19 எதிரொலியாகப் பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அகற்றுவதற்கு நாங்கள் திட்டமிடலாம்.

நிலைமைகள் சாதகமாக இருக்கும்போது மட்டுமே மீதமுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதில் நாம் கவனமாக இருத்தல் அவசியம். அதற்கு அப்பாலும் நாம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பரவலாகத் தடுப்பூசி போடப்பட்டாலும், COVID-19 எதிர்காலத்தில் தொடர்ந்து அச்சுறுத்தும். நிலை 0 ஐ எப்போது தாண்ட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது மற்றும் உள்நாட்டுச் சட்டக் கட்டுப்பாடுகளை நீக்குவது ஆகியவை மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் தெரிவிக்கப்படும். ஸ்காட்லாந்தில் வைரஸ் போதுமான கட்டுப்பாட்டில் இருப்பதையும் போதுமான அளவுக்கு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களால் மக்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதையும் மேலும் திருத்தப்பட்ட நமது மூலோபாய நோக்கத்துடனே நாம் இருப்பதையும் இந்த நிபந்தனைகள் உறுதிசெய்யும். தொற்றுநோயின் நிலை குறித்த நமது தற்போதைய பகுப்பாய்வு, குறைந்தபட்சம் 40 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களால் பாதுகாக்கப்படும் வரை நிலை 0 கட்டுப்பாடுகளை நீக்கக்கூடாது என்பதைக் குறிக்கிறது. ஆகஸ்ட் 9 ஆம் தேதிக்குள் இது நடக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் - இது தடுப்பூசியின் நோயெதிர்ப்பு சக்தி நடைமுறைக்கு வரும் தேதி.

மீதமுள்ள சட்டக் கட்டுப்பாடுகளை நீக்கும் கட்டத்தை அடைவது தொற்றுநோயின் முடிவல்ல. COVID-19 என்ற நோயை நாம் குறிப்பிட்ட காலத்திற்குச் சமாளிக்க வேண்டியிருக்கும். மேலும் இயல்புநிலைக்குத் திரும்புவதில் நாம் அடைந்த முன்னேற்றத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு, தனிநபர், வணிகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் வைரஸ் மீண்டும் பரவுவதை தடுப்பதற்கும் தடுப்பூசி பாதுகாப்பு இல்லாதவர்களைப் பாதுகாப்பதற்கும் அடிப்படை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடைபிடிப்பது அவசியமாகும்.

சில வரம்புக்குட்பட்ட சட்டக் கட்டுப்பாடுகள் இப்போதும் அவசியமாக இருந்தாலும், தனிநபர் பொறுப்பு, நல்ல நடைமுறை மற்றும் விவரமறிந்து முடிவெடுப்பது ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும். பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனைவரும் இதில் பங்கேற்கவேண்டும்:நல்ல காற்றோட்டத்தை உறுதி செய்தல்; நல்ல கை சுகாதாரத்தைப் பராமரித்தல்; சுவாச சுகாதாரப் பயிற்சி; தேவையான தருணங்களில் முகக்கவசம் அணிவது; நமது சோதனை மற்றும் பாதுகாப்பு அமைப்புடன் தொடர்ந்து

ஈடுபடுவது மற்றும் அறிகுறிகள் இருந்தாலோ அல்லது பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டலோ சுய-தனிமைப்படுத்திக்கொள்வது. நிலை 0 இலிருந்து நாங்கள், கட்டம் கட்டமாக அலுவலகத்திற்குத் திரும்புவதை ஆதரிப்பதற்காக வணிகத்துடன் இணைந்து செயல்படுவோம்.

இருப்பினும், சாத்தியமான மற்றும் பொருத்தமான இடங்களில் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு தொடர்ச்சியான ஆதரவை ஊக்குவிக்க நாங்கள் விரும்புகிறோம் - வைரஸைத் தொடர்ந்து கட்டுப்படுத்த உதவுவது மட்டுமல்லாமல், பரந்த நல்வாழ்வின் நலன்களிலும் அக்கறை செலுத்துவோம். ஸ்காட்லாந்து முழுவதும் புதிய தொற்றுகளின் வடிவத்தை நாங்கள் தொடர்ந்து கண்காணிப்போம் மற்றும் திடீர்ப்பெருக்கத்தை நிர்வகிக்க மேம்பட்ட உள்ளூர் பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்போம். முன்பு போலவே, மேலும் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் அல்லது அதிக அளவு பொதுப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவோம்.

நிலை 0 க்கு அப்பாலும் இலக்கு சார்ந்த வெளிநாட்டுப் பயணங்களுக்குக் கட்டுப்பாடுகள் இருக்க வாய்ப்புள்ளது. இருப்பினும், வெளிநாடுகளில் இருந்து வைரஸ் பரவும் அச்சுறுத்தலுக்கு எதிர்வினையாற்றத் தேவையான அளவில் மட்டுமே நாங்கள் கட்டுப்பாடுகளை வைத்திருப்போம்.

**தனி நபர் இடைவெளி பற்றிய மதிப்பாய்வு**

வணிகங்கள், போக்குவரத்து, கல்வி மற்றும் பிற நிறுவனங்கள் தனி நபர் இடைவெளி தொடர்பான நடவடிக்கைகளைக் கடைபிடிக்கக் குறிப்பிடத்தக்க தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. சமீபத்திய மதிப்பாய்வைத் தொடர்ந்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொருளாதாரம் மற்றும் சமூகம் குறைந்த கட்டுப்பாட்டுகளுடன் செயல்பட ஏதுவாக, தனி நபர் இடைவெளித் தேவைகளை எச்சரிக்கையுடன் எளிதாக்குவோம். நிலை 0 மற்றும் அதற்கு அப்பாலும் செல்வதற்கான முக்கியத் தேதிகளை அட்டவணை காட்டுகிறது. எங்கள் திருத்தப்பட்ட மூலோபாய நோக்கத்துடன் ஒத்துப்போவது அவசியமானது என்று தரவு சுட்டிக்காட்டினால் இந்தத் தேதிகளை நாங்கள் முன் நகர்த்தலாம் அல்லது பின் தள்ளலாம்.

அட்டவணை: கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான குறியீட்டுக் கால அட்டவணை

| தேதி | தளர்வின் நிலை | தனிநபர் இடைவெளி |
|---|---|---|
| 19 ஜூலை<br>இந்தத் தேதிக்கு முன்னதாகத் தொற்றுநோய் நிலை பரிசீலனை செய்யப்படும் | அனைத்து பகுதிகளும் நிலை 0 க்கு நகரும் | வெளிப்புறத்தை 0 மீட்டராகக் குறைத்தல்<br>உட்புறங்களை 1மீ[1]குறைத்தல் |
| 9 ஆகஸ்ட்<br>40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும் இந்தத் தேதிக்கு முன்னதாகத் தொற்றுநோய் நிலை பரிசீலனை செய்யப்படும் | அனைத்து பகுதிகளும் நிலை 0 க்கு அப்பால் நகரும் (நிலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன) | அனைத்துத் தனி நபர் இடைவெளி விதிமுறைகளும் நீக்கப்பட்டன |

[1] இது பொது உள்ளரங்க அமைப்புகளைப் பொறுத்தது. ஜூலை 19 முதல், தரவுவின் படி, அனைத்து பொது உட்புற அமைப்புகளிலும், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையையும் வீடுசார்ந்த வரம்புகளுக்கும் அடங்கும் சந்திப்புகளில் உள்ளவர்கள் இனி தங்கள் சந்திப்பு / குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் தனி நபர் இடைவெளியைப் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் மற்ற அனைவரிடமிருந்தும் குறைந்தது 1மீ இடைவெளியைப் பராமரிக்க வேண்டும்.

ஒரு தனியார் குடியிருப்பு அல்லது தோட்டத்தில் கூடும்போது தனி நபர் இடைவெளியைப் பராமரிக்கத் தேவையில்லை (அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்குள்) என்பதைத் தற்போதைய வழிகாட்டுதல் அனுமதிக்கிறது.